**தலைப்பு 438 - கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஒக்தோபர் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 நவம்பர் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2020 ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2187/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2020 ஆம் வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய இராஜாங்க அமைச்சினால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வைப்பு பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் வைப்புப் பெறுவனவுகள் ரூபா 1,701,372 என்பதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 665,404 ஆக ரூபா 1,035,966 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இரத்துச் செய்யப்பட்ட தொழில்துறை ஏற்றுமதிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிடமிருந்து கையேற்கப்பட்ட வைப்பு கணக்குப் பெறுவனவுகளும் கையேற்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி நீக்கப்பட்டு அமைச்சிற்கு உரிய வைப்புப் பெறுமதி மட்டும் எடுக்கப்பட்டிருந்தது. | திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் பெறுமதி உள்ளடக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 முற்பணப் பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணப் பெறுவனவுகள் ரூபா 10,558,898 என்பதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது 838,002 ஆக ரூபா 9,720,896 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இரத்துச் செய்யப்பட்ட தொழில்துறை ஏற்றுமதிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் மிகுதிகள் கையேற்கப்படாமையால் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கின் மிகுதிகளும் கையேற்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 838,002 ஆகக் காட்டப்பட்டுள்ளமை இந்த அமைச்சின் திறைசேரி அச்சீட்டு மிகுதிகளின் பிரகாரம் இந்த அமைச்சிற்கு மட்டும் உரிய பெறுமதியாகும். அதனால் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட தொகை ரூபா 838,002 சரியானது. | வழிகாட்டி இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 வைப்புக் கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 1,580,460 என்பதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 652,805 ஆக ரூபா 927,663 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி இரத்துச் செய்யப்பட்ட தொழில்துறை ஏற்றுமதிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் வைப்புக் கணக்கு கொடுப்பனவுகளும் கையேற்கப்பட்டிருந்தமையால் இந்த அமைச்சின் வைப்புக் கணக்கு கொடுப்பனவுகள் மட்டுமே திறைசேரி அச்சீட்டு மிகுதிகளின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகளாக ரூபா 652,805 ஆன கொடுப்பனவுகள் மட்டுமே காட்டப்பட்டுள்ளது. அது சரியானதாகும். | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மிகுதி உள்ளடக்கப் படுதல் வேண்டும். |

### 1.6.4 முற்பணக் கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 16,787,334 என்பதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 497,500 ஆக ரூபா 16,289,834 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி இரத்துச் செய்யப்பட்ட தொழில்துறை ஏற்றுமதிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் அரச உத்தியோகத்தரின் முற்பண பீ கணக்கின் கொடுப்பனவுகள் மிகுதிகள் கையேற்கப்பட்டமையால் அம்மொத்தப் பெறுமதி முற்பணக் கொடுப்பனவுகளாக பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருந்தது. எனினும் இவ்வமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு பணமாக மட்டுமே வழங்கப்பட்ட ரூபா 497,500 ஆன பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் அது சரியானது. | வழிகாட்டி இலக்கம் 06 இல் குறிக்கப்பட்டதன் பிரகாரம் கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.5 நிதிச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 13,057 ஆன பண மிகுதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 திசெம்பர் 31 இல் காசுப் புத்தக மிகுதி பொதுத் திறைசேரிக்கு தீர்க்கப்பட்டமையால் அது நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. அது சரியானது. | திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரம் நிதிநிலைமைக் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6.6 காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 28,884,309 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் மூலதன சொத்துக்களின் மீண்டெழும் மற்றும், மேம்படுத்தல் செலவுகள் ரூபா 3,303,753 ஆன செலவுகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செலவுகளான ரூபா 3,303,753 மற்றும் முலதனச் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கான செலவுகள் ரூபா 1,193,307 ஆகிய இரண்டின் பெறுமதியினதும் கூட்டுத்தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கைப்பற்றலின் கீழ் ரூபா 4,497,060 ஆகக் காட்டப்பட்டுள்ளது. | வழிகாட்டில் இலக்கம் 06 இல் குறிப்பிடப் பட்டிருந்ததன் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மூலதன விடயங்கள் 04 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 700,000 ஆன மொத்த ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டிருந்தது. | இரத்துச் செய்யப்பட்ட அமைச்சில் காணப்பட்ட இயந்திரங்களைப் பெற்றுக் கொண்டமை மற்றும் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கத் தொகை அதிகபட்ச செயற்திறனுடன் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மீண்டெழும் செலவு விடயங்கள் 15 மற்றும் மூலதனச் செலவு விடயங்கள் 03 இற்கான மொத்தம் ரூபா 23,830,000 ஆன தேறிய ஒதுக்கத்தில் ரூபா 13,420,114 ஆனது | கொவிட் தொற்று நோய் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடமைகளுக்கான பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை. இரத்துச் செய்யப்பட்ட | மதிப்பீடுகள் யாதார்த்தமாக தயாரிக்கப் படுவதற்கு உறுதி செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்பட்டு ரூபா 10,409,886 மிகுதியொன்று காணப்பட்டது. அது தேறிய ஒதுக்கத்தில் நூற்றுக்கு 24 இலிருந்து நூற்றுக்கு 99 வீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | அமைச்சின் எழுதுகருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கைப்பற்றியமை, புதிய அமைச்சொன்றாக இருந்தமையால் செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டமை, செலவுகள் சிக்கனமாக மேற்கொள்ளப்பட்டமை மற்றும் தொழில்துறை ஏற்றுமதிப் பிரிவின் ஒதுக்கங்கள் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமையால் ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டன. | |

**2.2 முற்பணக் கணக்கு எல்லைகளை மாற்றியமைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் குறைந்த பட்ச பெறுவனவுகள் எல்லை ரூபா 2,500,000 என்பதுடன் அந்த எல்லையை ரூபா 2,000,000 ஆக திருத்தப்படுவதற்கு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் 2020 திசெம்பர் 31 இல் நிதி அமைச்சருக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் 2021 மார்ச் 30 வரையில் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால நடவடிக்கைகள் வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | எல்லைகளை மீறுதல் திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு **iii** இன் கீழ் ரூபா 1,271,674 ஆன கடப்பாடுகள் மற்றும் நி.பி 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் உடன்பட்டிருந்த கடப்பாடுகள் கூற்றில் அப்பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றின் குறிப்பு iii இன் கீழ் ரூபா 1,271,674 ஆன விடயங்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் நி.பி 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் உடன்பட்டுள்ள கடப்பாடுகள் கூற்றில் பெறுமதி தவறாகக் காட்டப்படவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கள் சரியாக சமர்ப்பிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |